செ.வெ.எண்.08/மே நாள் : 15.05.2019

**பத்திரிக்கை செய்தி**

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளிலும் ஐந்தாண்டு (BA.LL.B.,) சட்டப் படிப்பில் முதலாமாண்டு சேர்க்கைகான விண்ணப்பங்கள் **16.05.2019** முதல் விநியோகம் செய்யப்பட உள்ளது. தருமபுரி நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இயங்கி வரும், தருமபுரி அரசு சட்டக் கல்லூரியில், அலுவலக வேலை நாட்களில் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம்.

SC/ST மாணவ, மாணவியர்கள் ரூ.250/-க்கான இந்தியன் வங்கி சலான் மற்றும் சாதி சான்றிதழ் நகல் சமர்ப்பித்து விண்ணப்பத்தினை பெற்றுக்கொள்ளலாம். இதர இன மாணவ, மாணவிகள் ரூ.500/- இந்தியன் வங்கி சலான் செலுத்தி விண்ணப்பத்தினை பெற்றுக்கொள்ளலாம். (இந்தியன் வங்கி சலான் கல்லூரி அலுவலகத்தில் வழங்கப்படும்). விண்ணப்பங்கள் பெறுவதற்கும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கும் கடைசி நாள் **31.05.2019.**

மூன்றாண்டு (LL.B.,) சட்டப் படிப்பில் முதலாமாண்டு சேர்க்கைகான விண்ணப்பங்கள் **28.06.2019** முதல் விநியோகம் செய்யப்பட உள்ளது. தருமபுரி சுற்று வட்டார பகுதிகளில் உள்ள மாணவ, மாணவிகள் பயன்பெறலாம் மேலும் விவரங்கள் பெற [website : https://govt-law-college-dharmapuri.business.site/] என்ற இணையதள மூலம் தெரிந்துக்கொள்ளலாம் என தருமபுரி அரசு சட்டக்கல்லூரி முதல்வர் திரு.ப.சிவதாஸ், M.L., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**